**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8073035

C

1. District மாவட்டம்: Coimbatore PS காவல்நிலையம்: Vigilance and Anti Corruption Year ஆண்டு: FIR No. மு.த.அ. எண்: 11/2018/AC/CB Date நாள்: 02.08.2018 1000hrs.

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988. Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் . Date from நாள் முதல்: 20.07.2018 Date to நாள் வரை: 01.08.2018

Time Period நேர அளவு : Time from நேரம் முதல்: 1620 hrs Time to நேரம் வரை: 16.24 hrs.

(b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 25.07.2018 Time நேரம்: 1820 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 25.07.2018 Time நேரம்: 1520 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: Computer Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: About 4 km. North WEST

Beat Number முறைக் காவல் எண்: (b) Address முகவரி: Office of the Assistant Executive Engineer, South Thudialur, TANGEDCO, Coimbatore District

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: S. Sivakumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: R. Subramanian

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 58/2018 (d) Nationality : நாட்டினம்: Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்:

Date of Issue : வழங்கப்பட்ட நாள்: Place of Issue : வழங்கப்பட்ட இடம்:

(f) Occupation : தொழில்: Business (g) Address : முகவரி: No6, Sri graham, Thirumalai nagar, Vadugampalayam, Ganapathy, Coimbatore - 641049.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. Ayyavu, Assistant Executive Engineer, South Thudialur Subdivision, TANGEDCO, CEDC NORTH Coimbatore District.
2. Tr. Thangamuthu, Asst. Engineer, Thudialur East section, TANGEDCO, CEDC NORTH, Coimbatore Dist.
3. Tr. Sivakumar, Commercial Inspector, o/o Asst. Engineer Thudialur East, TANGEDCO, CEDC NORTH, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

• GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.18(HCL-12)

Scanned by CamScanner

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Enclosed Seperate Sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 2/08/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 02/08/2018

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
02.08.2018 at 1130 hrs

Name: பெயர் J. Prabudass.
Rank: நிலை Inspector of police
VSAC, Coimbatore.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கு கோவை ஊ.த.க.பிரிவு குற்ற எண்.- 11/2018/AC/CB வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் இணைப்பு :-**

J.பிரபுதாஸ், காவல் ஆய்வாளர், ஊ.த.க.பிரிவு கோவை ஆகிய நான் கடந்த 25.07.2018-ம் தேதி மாலை 18.30 மணிக்கு அலுவலகத்தில் இருந்த போது கோவை மாவட்டம், கணபதி உடையாம்பாளையம், திருமலை நகர், ஸ்ரீகிரகம் கதவு எண்.6-ல் வசிக்கும் சுப்பிரமணியன் என்பவரின் மகன் திரு.S.சிவகுமார் என்பவர் கோவை ஊ.த.க.பிரிவு அலுவலகத்திற்கு வந்து ஒரு தமிழ் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினையும் மற்றும் இரண்டு CDக்களையும் கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புனர், S.சிவக்குமார், வயது-58, த/பெ.சுப்பிரமணியமன், க.எண்.6, ஸ்ரீகிரகம், திருமலை நகர், உடையாம்பாளையம், கணபதி, கோவை. பெறுனர், ஆய்வாளர் லஞ்ச ஒழிப்பு துறை, கவுண்டம்பாளையம், கோவை. அய்யா, நான் கோவை கணபதி உடையாம்பாளையத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் PUC படித்து விட்டு கோவை கணபதியில் உள்ள வாடகை கட்டிடத்தில் மருத்துவ உபகரணங்களை தயாரிக்கும் கம்பெனியை சிவாமெடி எகியுப்ஸ் என்ற பெயரில் கடந்த 6 வருடமாக நடத்தி வருகிறேன். நான் கோயம்புத்தூர், சின்ன வேடம்பட்டி, அம்பிகை நகரில் சைட் எண்.53, 53/1ல் எனது மனைவி மஞ்சுளா மற்றும் எனது பெயரில் சுமார் 10 சென்ட் காலி இடத்தில் புதியதாக மருத்துவ உபகரணங்களை தயாரிக்கும் கம்பெனியை ஆர்.சி கட்டிடம் மற்றும் தகர ஷெட்-ஆக சுமார் 3 ஆயிரம் சதுரடியில் கட்டியுள்ளோம். எனது தொழிற்சாலைக்கான மின் இணைப்பு பெற 03.07.2018 ஆம் தேதி துடியலூரில் உள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகம் கிழக்கு, கோவை மின் பகிர்மான வட்டம் (வடக்கு) அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த மின் இணைப்புக்கான விண்ணப்பம் பெற்று அதனை பூர்த்தி செய்து அத்துடன் மேற்படி சொத்து பத்திர நகல், வரி ரசீது நகல், தற்காலிக மின் இணைப்புக்கான மின் கட்டண ரசீது நகல் மற்றும் சிறுதொழில் செய்வதற்கான சான்றிதழின் நகல் ஆகிய அனைத்தையும் இணைத்து அந்த அலுவலகத்தில் இருந்த அலுவலக உதவி பொறியாளர் திரு.தங்கமுத்து என்பவரிடம் சமர்ப்பித்தேன். அதற்கான ஒப்பதல் ரசீது எனக்கு அவர் அன்றே அளித்தார். எனது விண்ணபபத்தினை பார்த்து விட்டு இது உங்கள் போன் நம்பரா என்று கேட்டு விட்டு, நேரடி ஆய்வு செய்ய வரும் போது தங்களுக்கு போன் மூலம் தகவல் சொல்லி விட்டு வருவதாகவும் சொல்லி என்னை அனுப்பி வைத்தார். பின்னர் 16.07.2018 ஆம் தேதி மதியம் உதவி மின் பொறியாளர் திரு.தங்கமுத்து அவர்கள் எனது தொலைபேசி எண்.8072199377 க்கு அவரது தொலைபேசி எண்.9445851080 மூலம் எனக்கு தொடர்பு கொண்டு அவரும் உதவி செயற்பொறியாளர் திரு.அய்யாவு மற்றும்

Scanned by CamScanner

செயற்பொறியாளர் திரு.நந்தகோபால் அவர்களும் எனது தொழிற்சாலைக்கு நேரடி ஆய்வு செய்ய கிளம்பி விட்டதாகவும், சுமார் அரைமணி நேரத்தில் வந்து விடுவதாகவும், அதனால் நீங்கள் அங்கு காத்திருங்கள் என்று கூறினார். அதன்படி நானும் எனது தொழிற்சாலையில் காத்திருந்தேன. அதன்படி மேற்படி மூவரும் எனது தொழிற்சாலைக்கு வந்து ஆய்வு செய்து விட்டு சென்று விட்டனர். பின்னர் நான் 20.07.2018 ஆம் தேதி மாலை சுமார் 4.30 மணிக்கு உதவி மின் பொறியாளர் திரு.தங்கமுத்து அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து எனது மின் இணைப்பு சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் முதலில் எங்கள் அலுவலகத்தில் ரூ.50/- செலுத்தி விண்ணப்பத்தினை பதிவு செய்ய வேண்டும் என்றும் Emd ஆக ரூ.27,600/- கட்ட வேண்டும் என்றும் உங்க தொழிற்சாலை அருகில் டிரான்ஸ்பார்மர் இல்லாததால் அரசாங்க செலவில் புதியதாக அமைப்பதற்கு உங்கள் சொந்த செலவில் கூலி ஆட்களுக்கு ரூ.30,000/-மும், அங்கிருந்து உங்கள் செலவில் மின்கம்பம் போட்டு மின் இணைப்பு கொடுக்க ரூ.37,000/- முதல் ரூ.40,000/- வரை அலுவலகத்தில் கட்ட வேண்டும் என்றும் தனியாக அலுவலக செலவு ரூ.5,000/- ஆகும் என்று செலவு விவரத்தையும், மின் இணைப்பு பெற தனக்கும், உதவி பொறியாளர் திரு.அய்யாவு மற்றும் செயற்பொறியாளர் திரு.நந்தகோபால் ஆகியோர் ஒவ்வொருவருக்கும் ரூ.25000/- தனியாக கொடுக்க வேண்டும் என்றும், உதவி பொறியாளர் வைத்திருந்த ஒரு வெள்ளை பேப்பரில் எழுதி காண்பித்தார் அவ்வாறு கொடுத்தால் மட்டுமே மின் இணைப்பு உங்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும் என்று கூறினார். அதற்கு நான் அவ்வளவு பணம் கொடுக்க இயலாத நிலையில் உள்ளேன் என்றும் கூறினேன். அதற்கு அவர் தனக்கும் மற்ற இருவருக்கும் ரூ.15000/- கொடுத்து விடுங்கள் என்றும், நான் பணி மாறுதலில் செல்ல இருப்பதால் நான் இங்கு தொடர்ந்து இருந்தால் உடனிருந்து வேலைகளை செய்து முடித்த பிறகு தங்களிடம் பணம் பெற்று கொள்கிறேன் என்றும் உதவி செயற் பொறியாளர் அவர்களுக்கு பணம் கொடுத்தால் மட்டுமே உங்களுக்கு தொழிற்சாலைக்கான மின் இணைப்பு வழங்க ஆவண செய்யவார் என்று கூறி 23.07.2018 ஆம் தேதி திங்கட் கிழமை உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு வந்து மின் இணைப்புக்கான விண்ணப்பத்தை பதிவு செய்ய அவரை நேரில் வந்து பாருங்கள் என்றும் அப்போது அலுவலகத்தில் இருக்கும் கமர்சியல் இன்ஸ்பெக்டருக்கு ரூ.5,000/-மும் கொடுக்க வேண்டும் என்று கூறி அனுப்பி வைத்தார். அதன்பேரில் நானும் 23.07.2018-ம் தேதி உதவி மின் பொறியாளர் திரு.தங்கமுத்து அவர்கள் அலுவலகத்தில் காலையில் சந்தித்து அவர் ஏற்கனவே கூறியபடி விண்ணப்பம் பதிவு செய்ய வேண்டும் என்று கூறினேன். அதற்கு நான் ஏற்கனவே ஒத்துக் கொண்ட ஒவ்வாருவருக்கும் ரூ.15,000/-ம் என்பதை உதவி செயற்பொறியாளர் திரு.அய்யாவு ஏற்று கொள்ள மறுத்து விட்டார் என்றும் அதனால் நீங்கள் உதவி செயற்பொறியாளர் திரு.அய்யாவு அவர்களை நேரில் சந்தித்து பணம் சம்மநதமாக பேசி விட்டு

Scanned by CamScanner

என்னை வந்து பாருங்கள். அப்போது தான் உங்கள் விண்ணப்பத்தை பதிவு செய்ய முடியும் என்று கண்டிப்பாக கூறி விட்டார். அதன்படி நான் அன்று மாலை சுமார் 4 மணிக்கு குடியலூரில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று உதவி செயற்பொறியாளர் திரு.அய்யாவு அவர்களை நேரில் சந்தித்து எனது மின் இணைப்பு சம்மந்தமாக விண்ணப்பம் கொடுத்துள்ளதையும், உதவி பொறியாளர் திரு.தங்கமுத்து அவர்களை நேரில் சந்தித்த விவரங்கள் எல்லாவற்றையும் கூறினேன். அப்போது அவர் தலா ரூ.20,000/- தனக்கும், செயற்பொறியாளர் திரு.நந்தகோபால் மற்றும் அவரது மின் பொறியாளர் திரு.தங்கமுத்து ஆகிய ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டும் என்று கூறினார். நான் இப்போது தான் தொழிற்சாலை கட்டி தொழில் தொடங்க உள்ளேன். தற்போது நான் பணம் இல்லாமல் மிகவும் கஷ்டத்தில் உள்ளேன். ரூ.10,000/- மட்டும் பெற்றுக் கொண்டு மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்கு அவ்வாறு கொடுக்க இயலாது என்றும், ரூ.20,000/- ஐ ஒவ்வொருவருக்கும் தனியாக கொடுத்தால் மட்டுமே பரிந்துரை செய்து மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்ய முடியும் என்று கண்டிப்புடன் கூறி விட்டார். அப்போது அலுவலக வேலையாக அங்கு வந்த உதவி பொறியாளர் திரு.தங்கமுத்துவிடம், உதவி செயற்பொறியாளர் திரு.அய்யாவு நான் பணம் கொடுக்க ஒப்பு கொண்டதாக கூறி விண்ணப்பத்தினை பதிவு செய்யும்படி பரிந்துரை செய்தார். அதன்படி இன்று 25.07.2018 ஆம் தேதி காலை சுமார் 10 மணிக்கு நான் உதவி மின் பொறியாளர் திரு.தங்கமுத்து அவர்களின் அலுவலகம் சென்று அவரை சந்தித்தேன். அப்போது அங்கிருந்த கமர்சியல் ஆய்வாளர் திரு.சிவக்குமார் அவர்கள் ஏற்கனவே 03.07.2018 ஆம் தேதி கொடுத்த விண்ணப்பத்தினை என் கையில் கொடுத்து அங்கிருந்த கேஷ் கவுண்டரில் காண்பித்து ரூ.50/- செலுத்தி பதிவு செய்யும்படி கூறினார். அதன்படி நானும் ரூ.50/- செலுத்தி பதிவு செய்தேன். அதன் பிறகு Emd ஆக ரூ.27600/- செலுத்தி ரசீது பெற்று கொண்டேன். உதவி பொறியாளர் திரு.தங்கமுத்து அவர்கள் சொன்னபடி ரூ.5000/- பணம் இல்லாததால் சுமார் 10.30 மணிக்கு என்னிடமிருந்த ரூ.4000/- மட்டும் கமர்சியல் ஆய்வாளர் திரு.சிவக்குமார் அவர்களிடம் லஞ்சமாக கொடுத்தேன். பின்னர் உதவி பொறியாளர் திரு.தங்கமுத்து அவர்களிடம் நான் எனது வேலையாக நாளை சென்னை செல்ல இருப்பதாகவும் வேலை முடித்து திரும்பி வருகின்ற செவ்வாய்கிழமை வருவதாகவும் சொன்னேன். அதற்கு அவர் உதவி செயற் பொறியாளர் உடனே பணம் எதிர் பார்ப்பார். அதனால் நீங்கள் உதவி செயற்பொறியாளரிடம் நேரில் சென்று விவரத்தை கூறி சென்று விடுங்கள் என்று கூறினார். எனது தொழிற்சாலைக்கு லஞ்சம் கொடுத்து மின் இணைப்பு பெற விருப்பம் இல்லாததால் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க முடிவு செய்தேன். எனக்கு எனது தொழிற்சாலைக்கு மின் இணைப்பு பெற விண்ணப்பம் பதிவு செய்ய லஞ்சமாக ரூ.4000/- பெற்றுக் கொண்ட கமர்சியல் ஆய்வாளர்

Scanned by CamScanner

திரு.சிவக்குமார், எனது தொழிற்சாலைக்கு மின் இணைப்பு கிடைக்க பரிந்துரை செய்வதற்கு தனக்காகவும், செயற்பொறியாளருக்காகவும் தலா ரூ.20,000/- லஞ்சமாக கேட்ட உதவி பொறியாளர் திரு.தங்கமுத்து மற்றும் உதவி செயற்பொறியாளர் திரு.அய்யாவு ஆகிய மூன்று பேர்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். கடந்த 20.07.2018 ஆம் தேதி உதவி பொறியாளர் அலுவலகத்தில் உதவி பொறியாளர் திரு.தங்கமுத்து அவர்களிடம் பேசிய போது நடந்த உரையாடல்கள் மற்றும் 23.07.2018 ஆம் தேதி உதவி செயற்பொறியாளர் அலுவகத்தில் உதவி செயற்பொறியாளர் திரு.அய்யாவு அவர்களிடம் பேசிய போது நடந்த உரையாடல்களையும் நான் எனது மொபைல் போனில் பதிவு செய்தவைகளை இரண்டு குறுந்தகடில் தனித்தனியே பதிவிறக்கம் செய்து தற்போது தாங்களிடம் ஆஜர் செய்கிறேன். இப்படிக்கு ஒம்/--XXXXX(S.சிவக்குமார்) Sir, Received the complaint on 25.07.2018 at 18.30 hrs Sd/- (xxxx) 25.07.2018 J. Prabudass, Inspector of Police, V&AC,Coimbatore. Sir, The complaint was sent to DVAC by mail seeking a Preliminary Enquiry. Sd/- (xxxx) 25/07/2018 J. Prabudass, Inspector of Police, V&AC, Coimbatore. Sir, After receiving permission from the Director of Vigilance and Anti-Corruption in PE.229/2018/TANGEDCO/CB, dated 25.07.2018, a preliminary enquiry was registered in PE 229/2018/TANGEDCO/CB on 25.07.2018 at 20.30 hrs. Sd/- (xxxx) 25.07.2018 J. Prabudass, Inspector of Police V&AC,Coimbatore. Sir, during preliminary verification the two CDs handed over by the complainant along with the complaint was heard in the presence of the complainant. The demand made by A1 Tr.Ayyavu, Assitant Executive Engineer and A2 Tr.Thangamuthu Assistant Engineeer was confirmed. The Preliminary verification also confirmed that A3 Tr.Sivakumar, Commercial Inspector had accepted Rs.4,000/- as undue advantage from the complainant on 25.07.2018 inconnection with registering the application submitted by the complainant. Preliminary verification also confirmed that bribe amount has to be given to A2. Inorder to further confirming the demand, the complainant was asked to meet A1 and record the conversation in the voice recording device. Accordingly the complainant went to the office of A1 on 26.07.2018 at 11.30hrs and 15.30hrs, but A1 was not present in his office. On the same day complainant went to Chennai for his official work and returned to Coimbatore on 31.07.2018. Hence the complainant was again sent to meet A1 Tr.Ayyavu on 31.07.2018 at 12.10hrs and 15.30hrs. But the accused was not present in his office. Subsequently, the conversation between the complainant Tr.S.Sivakumar and the A1 Tr.Ayyavu was recorded on 01.08.2018 between 15.57 hrs and 16.13 hrs in the office of the Assistant Executive Engineer(South), TANGEDCO, Thudiyalur, Coimbatore District in the

Scanned by CamScanner

voice recording device. The total length of recording is between 15.55 hrs and 16.24 hrs. During the above said days Grl PC 1745 Tr.M.Sudhagar had accompanied the complainant The said conversation was heard in the presence of the complainant and he identified the voices in the voice recording device and it confirmed the demand of undue advantage of Rs.[illegible],000/- by Tr.Ayyavu, Assistant Executive Engineer(South). Thereby a prima facie case was made out against A1 to A3. After getting oral permission from the DVAC, a case in Coimbatore V&AC Cr.No 11/2018/AC/CB u/s 7 of PC Act 1988 was registered on 02.08.2018 at 10.00 hrs against A1 Tr.Ayyavu, Assistant Executive Engineer(South), TANGEDCO, Thudiyalur, Coimbatore District, A2 Tr.Thangamuthu, Assistant Engineer, East Section, TANGEDCO, Thudiyalur and A3 Tr.Sivakumar, Commercial Inspector, O/o the Assistant Engineer, East Section, TANGEDCO, Thudiyalur, Coimbatore District and took up investigation. Sd/- (xxxx) 02.08.2018 J. Prabudass, Inspector of Police, V&AC, Coimbatore. அசல் புகார் மனு, இரண்டு குறுந்தகடுகள் (One CD containing the audio conversation made between complainant and A1 Tr.Ayyavu, AEE and A2 Tr.Thangamuthu, AE and another CD containing the audio conversation made between the complainant and A2 Tr.Thangamuthu) மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசல் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் கோவை அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

(signature) 02/08/2018
(J.பிரபுதாஸ்)
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க.பிரிவு கோயம்புத்தூர்.

மேலும், இவ் புகார் அனுப்பட்ட இரு குறுந்தகடு மற்றும் அதற்கான [illegible] u/s 65(B)(4)(c) of IE Act 1872 ஆகியவை [illegible] கனம் சிறப்பு நீதிமன்ற நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் கோவை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(signature) 02/08/2018
J. பிரபுதாஸ்
ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு,
கோயம்புத்தூர்.

Scanned by CamScanner